

விழாவில் மாமன்னர் பூலித்தேவன் நினைவு அறக்கட்டளை தலைவர் ம.நடராசன், திரைப்பட நடிகர்கள் ராஜேஷ், கஞ்சாகருப்பு, நடிகை தன்ஷிகா, திரைப்பட இயக்குனர் மனோஜ்குமார், கவிஞர் சினேகன் மற்றும் பலர் கலந்து கொண்ட போது எடுத்த படம்.

# ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும்

## மாமன்னர் பூலித்தேவன் பிறந்த நாள் விழாவில் ம. நடராசன் பேச்சு

வாசுதேவநல்லூர், செப்.5–

நெல்லை மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே உள்ள நெல்கட்டும் செவலில் ஆங்கிலேயர்களை எதிர்த்து முதன் முதலாக வீர முழக்கமிட்டு போரிட்ட சுதந்திர போராட்ட வீரர் மாமன்னர் பூலித்தேவனின் 296–வது பிறந்த நாள் விழா நடைபெற்றது.

மாமன்னர் பூலித்தேவன் நினைவு அறக்கட்டளை மற்றும் நெல்கட்டும்செவல் ஊர் பொதுமக்கள் சார்பில் உள்ளமுடையார் கோவில் முன்பு நடந்த இந்த விழாவுக்கு மாமன்னர் பூலித்தேவன் நினைவு அறக்கட்டளை தலைவர் ம.நடராசன் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது:–

வெள்ளையர்களை எதிர்த்து முதன்முதலில் போராடியவர் மாமன்னர் பூலித்தேவன். விஸ்வநாத நாயக்கர் காலத்தில் மேற்கு தொடர்ச்சி மலைபகுதி 72 பாளையங்களாக பிரித்து ஆட்சி நடத்தப்பட்டது. 12–க்கும் மேற்பட்ட மறவர்கள் ஆட்சி செய்தார்கள். அந்த வழியில் வந்தவர்கள்தான் நாம்.

பிரச்சினை செய்பவர்களை அரசு கண்டுபிடித்து நடவடிக்கைஎடுக்கவேண்டும். தலித் சமுதாயத்தினருக்கு நாம் எதிரி அல்ல. அனைத்து சமுதாயத்தினரையும் ஒன்றிணைத்து செல்லக்கூடிய சமுதாயம்தான் நம் சமுதாயம். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த மாயாவதி உத்தரபிரதேச முதல்வராக முக்கிய பங்கு வகித்தவன் நான்.

சாதி மோதலை தவிர்க்க வேண்டும். சிறு பிரச்சினைகளுக்குகூட இடம் கொடுக்க கூடாது. நமது சமுதாயத்தினர் அனைவரும் படித்துபட்டம்பெறவேண்டும். சாதி மோதலை தடுக்க வேண்டும் என்றால் கல்வி அறிவு பெறவேண்டும். அனைத்து இளைஞர்களும் படித்து பட்டம் பெறுவோம் என்று சபதம் ஏற்க வேண்டும். ஏற்றத்தாழ்வு இல்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டும். கஷ்டப்பட்டு படிக்க வைக்கும் பெற்றோர்களை காப்பாற்ற வேண்டும்.

நான் எத்தனையோ பேருக்கு கல்வி உதவி செய்து இருக்கிறேன். அதை விளம்பரபடுத்தியது இல்லை. சமீபத்தில் கூட இலங்கை தமிழர் ஒருவரை மருத்துவ கல்லூரியில் சேர்த்து விட்டு இருக்கிறேன். இதெல்லாம் ஏன் செய்கிறேன் என்றால், நாடு வளர்ச்சி அடைய கல்வி அறிவு வேண்டும்.

முத்துராமலிங்க தேவர் சொல்வார், விவேகம் இல்லாத வீரம் கோழைத்தனமானது. அந்த நிலைக்கு நாம் செல்லக்கூடாது. உணர்ச்சி பொங்க பேசுவதில் நான் நம்பிக்கை இல்லாதவன். நீங்கள் செயலில் காட்ட வேண்டும். நீங்கள் படித்து பட்டம் பெற்றால்தான் உங்களிடம் சால்வை, மாலை போன்றவற்றை வாங்குவேன். இவ்வாறு ம.நடராசன் பேசினார்.

முன்னதாக விழாவுக்கு சாமிதோப்பு பாலபிரஜாதிபதி அடிகளார் முன்னிலை வகித்தார். அறக்கட்டளை பொருளாளர் அ.வேலாயுதசாமி வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் சாயல்குடி வீர வேலுநாச்சியார் அமைப்பு தலைவர் கார்த்திக் நாயகனி நாச்சியார், ஓய்வுபெற்ற மாமன்னர் பூலித்தேவன் வரலாற்று ஆய்வாளர் வன்னிக்கோனேந்தல் சமரசம், முன்னாள் யூனியன் தலைவர் எஸ்.காளியம்மாள், மேலநீலிதநல்லூர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி முதல்வர் பி.ரமாதேவி, ஓய்வுபெற்ற தென்காசி கல்வி மாவட்ட அதிகாரி சக்திமோகன், நெல்கட்டும்செவல் நிர்வாகிகள் ரா.சிதம்பர பாண்டியன், ராஜலிங்கராஜா, சங்கரன்கோவில் அரசு மேல்நிலைப்பள்ளி முதல்வர் சங்கர்ராம், திருஞானசம்பந்தர் அறக்கட்டளை செயலாளர் எம்.ஜெய்லானி, ஊர் நிர்வாகி இரா.முருகன், ஜமீன் இலந்தகுளம் முத்துபாண்டியன், சாமித்துரை உள்பட பலர் பேசினர்.

திரைப்பட நடிகர்கள் ராஜேஷ், கஞ்சாகருப்பு, இயக்குனர் மனோஜ்குமார், கவிஞர் சினேகன், நடிகை தன்ஷிகா, ஊர் பிரமுகர் வெள்ளத்துரை மற்றும் நெல்லை, தூத்துக்குடி, மதுரை, கன்னியாகுமரி, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மாமன்னர் பூலித்தேவன் இயக்க நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.